
வெலம்பொட அமீன்



மையித்தின் மீதெழும்

# புல்வெளி

# மையித்தின் மீதெழும் புல்வெளி

**வெலம்பொட அமீன்**

யாத்ரா
வெளியீடு

# ஆக்கிரமிக்கப்படும் முஸ்லிம் தேசத்தின் அழுகையான கவிதைகள்


• Mayyithin Meethelum Pulveali - Collection of Poems
• Velamboda Ameen © A.L.M. Ameen
• Contacts: No 01, Kooradeniya, Velamboda, Kandy. Tel : 071 5494746, 0602804731
• First Edition - 2008
• Published by Yathra. 37, Sri Sidhartha Mawatha, Mabola, Wattala, Sri Lanka.
• Phone: 0777 303818 • Email: yaathra@hotmail.com
• Cover Design: Com Print System, HL 1/2, Dias Place, Colombo 12
Tel: 0777 636138
• Inside Art Work: Kinniya Jahangeer
• Printed by: A.J. Prints (Pvt) Ltd. No. 44, Station Road, Dehiwala
• ISBN 978-955-8448-03 -8
• Price: 150/=

சில தேடல்களுக்கும்
சில மௌனங்களுக்கும்...

# அணிந்துரை

## 01

**தி**டீரென விழித்தெழுந்த ஒரு அதிகாலைப் பொழுதில் உங்களது கவிதைப் பிரதியை இரண்டாவது முறையாக வாசித்தேன்.

எந்தவொரு மனச் சலனமும் அற்ற அந்தப் பொழுதில் உங்களது எழுத்துக்கள் எனக்குள் பல்வேறு காட்சிகளைப் புலப்படுத்தி நகர்ந்து கொண்டே இருந்தன. எந்தவிதமான உணர்ச்சிகளுக்கும் என்னை இழுத்துச் செல்லவில்லையாயினும் படித்துவிட்டுப் பிரதியை மூடு வதற்குள் என் மனதை ஒரு பயம் ஆட்கொண்டது. ஏனென்றால் நான் உங்களது பார்வையோடு நின்று சிந்திக்காமல் சற்று அனுபவப்பட்ட முதிர்ந்த நிலையில் நின்று கொண்டிருக்கிறேன்.

சர்வதேச ரீதியாகவும் முஸ்லிம் சமுதாயம் ஓர் ஆபத்தான சமுதாயம் என்று சித்தரிக்கப்பட்டு வருகிறது. முஸ்லிம்களது நிலங்கள் அபகரிக் கப்படுகின்றன. அவர்கள் அவர்களை ஆளுவதற்கான வாய்ப்பு மறுக் கப்பட்டு வருகிறது. அவர்கள் அகதிகளாக அங்குமிங்கும் துரத்தப் பட்டு அலைக்கழிக்கப்பட்டு வருகிறார்கள். இதன் எதிர்வினை அதற்கேற்றாற் போல்தான் அமைந்திருக்கும் என்பதில் எவருக்கும் சந்தேகம் வரப்போவதில்லை. என்னைப் போன்ற பலரைப் போல நீங்களும் கையிலெடுத்த ஆயுதம் கவிதை. அது ஒரு கடைநிலை ஆயுதம் என்று பலர் கருதக்கூடும். ஆனால், எனது கணிப்பில் நாம் பட்ட அவலத்தை நீண்ட காலம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடிய வல்லமைமிக்க முதற்தர ஆயுதம் அதுவே.

இது இந்த ஆயுதம் அல்ல. முஸ்லிம் சமூகத்தின் விடிவுக்காக கையி லெடுக்கப்பட்ட எந்த ஆயுதம் குறித்தும்; அல்லது அதை எடுத்துக் கொண்டவர்கள் குறித்தும் உயர்வான மதிப்பீடு எனக்குண்டு. ஆயுதங் கள் நான் தயாரிப்பதற்கு யார் யாரெல்லாம் காரணகர்த்தாக்களாக இருந்தார்களோ அவர்களும் அல்லது எவ்வெக் காரணிகள் காரண மாக இருந்தனவோ அவற்றுக்குக் காரணமாக இருந்தவர்களுமே பொறுப்புதாரிகள். இதில் என்னிடம் இரு கருத்துக்கள் கிடையாது.

ஆனாலும்கூட சற்று வயது ஏற ஏற மனதில் பயம் தோன்றுகிறது. நான் இப்போது நமது எதிர்கால சந்ததிகளின் நிலைபற்றி எண்ணிக் கவலைப்படுகிறேன். நமது ஆயுதம் காலங்கள் கடந்து நின்று நமது அடுத்த சந்ததிக்கு சரித்திரத்தைச் சொல்லப் போகிறது. அது என்ன எதிர்வினைகளை ஏற்படுத்தும் என்பது குறித்து எனக்குக் கவலை உண்டாகிறது.

பதினைந்து அல்லது இருபது வருடங்களுக்கு முன்னர் என்றால் உங்களைத் தூக்கி வைத்து பாராட்ட மனமும் உடலும் உவகை கொள்ளும் சற்று அனுபவமடைந்த நிலையில் என்னால் அதைச் செய்ய முடிய வில்லை. ஆனால், தவறு நம்முடையது அல்ல. இருந்தபோதும் ஒரு உறுத்தல் மனதை அரித்துக் கொண்டே இருக்கிறது.

இந்த அபாக்கியமான நிலையிலிருந்து நம்மையும் நம் கவிதையை யும் எவ்வாறு விடிவிப்பது அல்லது அதைக் கொண்டு சமூக மேம்பாட்டுக்கு எதைச் செய்வது என்பது குறித்து இனிமேல் நாம் சிந்தித்தாக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

## 02

கவிதையே வாழ்வாகக் கொண்ட ஒரு மக்கள் கூட்டத்தின் வாரிசு நாம். கவிதை வாழையடி வாழையாக நமது முதுசமாக நிலைபேறு கொண்டது. கவிதை பற்றி நமக்குள்ள பெருமைவேறு யாருக்கும்

கிடையாது. அதன் பெருமைக்குரிய இன்றைய வாரிசுகளில் நீங்களும் ஒருவராகி இருக்கிறீர்கள். அரபுமொழியை கவிதையின் மொழி என்று சொல்வார்கள். கவிதை மனமும் பாரம்பரிய கவிதை உணர்வும் கொண்ட நீங்கள் கவிதை மொழியை கற்றும் வருகிறீர்கள் என்பது எப்பேர்க்கொத்த பாக்கியம்.

துரதிஷ்டவசமாக இந்த கவிதை மொழியைக் கற்றவர்கள் அதை எவ்வாறு காசாக மாற்றலாம் என்று எண்ணிச் செயற்படும் நிலையில் கவிதை மனம் கொண்ட உங்களிடம் ஒரு சமூகப் பிரஜையாக கவிதா ஆர்வலனாக நான் ஏராளமாக எதிர்பார்ப்பதில் எவ்விதமான தவறும் இல்லை என்று நினைக்கிறேன். உங்களுக்குக் கிடைத்திருக்கும் பாக்கியங்களில் ஊடாக எங்கள் எதிர்பார்ப்பை எவ்வாறு நிறைவுசெய்யப் போகிறீர்கள் என்பதை நீங்கள் முடிவு செய்தாக வேண்டும்.

இன்று தமிழ்க் கவிதை சர்வதேச மட்டத்தை தொட்டு விட்டது என்று எழும் எந்தப் பெருங்குரலையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. வெளிநாடுகளிலிருந்து கவிதை என்று தமிழில் எழுதப்படுபவை யாவும் சர்வதேச தரத்திற்கு இணையாகி விடுவதில்லை. தமிழ்க் கவிதையும் இலக்கியமும் சர்வதேசத்தை அடைந்து விட்டது என்பது வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம்.

எந்த மொழியில் எழுதப்பட்டாலும் உயிர் துடிக்கும் உணர்வில் அதிலிருக்குமாக இருந்தால் அது நல்ல கவிதையாக இருக்கும் எழுதப்படுபவை எல்லாம் அவ்வாறு உள்ளனவா என்பது எனது கேள்வி நாகரிகம் வாழ்வை எவ்வாறு இயந்திரமயப்படுத்தியதோ அதேபோல இலக்கியமும் அமைந்து போய்விட்டதான உணர்வு எனக்குண்டு. ஒரு கவிதையில் மொழியின் செழுமைஇல்லாது போகுமாக இருந்தால் ரசிப்புக்கு அல்லது ஓர் உணர்வுத் தூண்டலுக்கு எவ்வகையிலும் உதவாது கவிதைகள் மலிந்து விட்டன. ஆனால், மொழியின்

செழுமைகுறைந்துவிட்டது. எனவே, கவிதைகள் மக்களது உள் ளத்தைத் தொடுவது குறைந்து வருகிறது.

ஒரு சிறந்த கவிதை தனக்குரிய கவிஞனையும் தனது மொழி யையும் தேடிக் கொள்ளும் என்று சொல்வதுண்டு. ஒரு முதிர்ந்த கவிஞனுக்கான கொடுப்பினை அது. கவிதை ஒன்று இளையவரிட மிருந்து புறப்பட கருக் கொள்கிறது என்றால் அது யாருக்கானது என்ற தீர்மானத்தை மேற்கொண்டாக வேண்டும். பின் அதற்கான மொழியைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். எந்த விதத்தில் வெளிப்படுத்தப் போகிறோம் என்பதையும் முடிவு செய்தாக வேண்டும். அவ்வாறான வடிவமைப்பை மேற்கொண்ட பிறகு அது தேன் துளிகளாய் சொட்டுச் சொட்டாக ஒழுகும். அதைச் சிந்தாமல் சிதற விடாமல் பிடித்துக் கொள்வோமாக இருந்தால் ஓர் அருமையான கவிதை நமக்குக் கிடைக்கும்.

## 03

இந்தத் தொகுப்பில் உள்ளடங்கியுள்ள உங்கள் கவிதைகள் கோப முள்ளவை பழுத்துக் கிடக்கும் நெருப்புத் துண்டங்களைப் போல் சுடுபவை. இரத்தம் கசிந்த பின்னர் வலிக்கும் காயங்களை ஒத்தவை. சில கண்ணீர் துளி போன்றவை. உங்கள் வயதும் உணர்வும் கலந்து வடித்தெடுத்த சொற்சிற்பங்கள்.

பசியின் எஞ்சியதை உறிஞ்சி
அதிகாரங்களின் முகங்களில் துப்புவதற்கு

சாம்பல் மேடுகளில் தோய்ந்த மரக்கட்டையாய்
வாழ்வு
வீழ்ந்து கிடக்கிறது

கற்பகத்தை மறைத்து வைத்த பின்
எஞ்சியிருந்த கானலையும்
நக்கிக் கொண்டு போனாய்
ஒரு நதியில்
நட்சத்திர இரவின் மூங்கில் காட்டில்
இதுவரை கேள்விப் படாத ஓர் ஊரில்
அது ஷஹீதாகும்
உனக்கெதிராக

முறிந்த கனவுகளையும்
ஆயுதங்களாக நிறுத்திவிட்டு
பார்வை எங்கே
தொலைகிறது

கதறக் கதற
என் நரம்புகளை உருவி
வீணை செய்து
உன் தேசத்தின் தேசிய கீதத்தைப் பாடு

என்பன போன்ற ரௌத்திரம் மிகுந்த வரிகளை மீண்டும் மீண்டும் வாசித்து ரசித்து ஒரு இளைய கவிஞனின் நியாயமான சினம் வெளிப்படும் அழகு இரவு வானில் ஆங்காங்கு பூத்துக் கிடக்கும் நட்சத்திரங்களைப் போல கவிதைகளில் மின்னிக் கொண்டிருக்கிறது.

இந்த கோபத்துக்கும் ஆத்திரத்துக்கும் பின்னணியில் உள்ளது மானுடத்தின் மீது நீங்கள் கொண்டுள்ள தீராத காதல். இளமைமுறுக்குக் கொண்ட இந்த வயதில் ஒற்றை வழிப்போக்கைத் துணியும் இளமையில் மானிட சமூகத்துக்காக இரங்கும் மனதைத் தந்தமைக்காக நீங்கள் இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள்.

நாம் நவீன சஞ்சிகைகளோடும் அவற்றின் கவிதைகளோடும் வாசிப்பை மட்டுப்படுத்திக் கொள்ளும் நிலையைத் தவிர்த்து சற்றுப் பின்னே சென்று நமது முன்னோரின் படைப்புக்களையும் ஆழப் படிக்க வேண்டும் அதன் பின்னர் பாருங்கள். கவிதைகள் ஒற்றை விரலில் நின்று சுழலும் நர்த்தகியின் லாவகத்தையும் தாயாரின் கையிலிருந்தே சிரிக்கும் குழந்தையின் அழகையும் பெற்றுக் கொள்ளும்.

அவ்வாறான ஒரு நிலை ஏற்படும்போது புகைந்து கொண்டிருக்கும் கோப நெருப்பு சற்றுத் தணியும் வாழ்வின் பலகணிகளுடாக பலகோடி தரிசனங்கள் நமக்குக் கிடைக்கும். அந்த தரிசனங்களுடே மக்களுக்கான கவிதையை நீங்களும் தருவீர்கள்.

நான் பயத்திலிருந்து விடுதலை பெறுவேன்.

அன்புடன்

அஷ்ரஃப் சிஹாப்தீன்
(0777 303818)

# துப்பாக்கிக் கவிதைகள்
# என்ற நம்பிக்கையில்...

## 01

நீண்டு செல்லும் ஒரு பயணத்தின் தரிப்பிடம் மரணம் இளைப்பாறி விட்டு மீண்டும் பயணத்தைத் தொடருகின்றோம். இது ஒரு நல்ல கவிதையை வாசித்துக் கொண்டிருக்கும்போது தட்டுப்படும் எழுத்துப் பிழை மாதிரி. இந்தப் பயணம் ஒரு திருப்தியையும் நிகரில்லா இன்பத் தையும் அடையும் வரை தொடர்கிறது. இந்த தொடர்ந்தேர்ச்சையான வேகம்தான் என்னுள் கவிதைப் பண்பாட்டை, கவிதை இயக்கத்தை தோற்றுவிக்கிறது.

நான் கவிதை எழுதத் தொடங்கும் போதெல்லாம் "நான்" என்பது மறைந்து போகிறது. ஒரு வெள்ளைத் தாளும் கறுப்பு மைப் பேனையும் என் மனசாட்சியும் மனிதத்துவமும் தான் என் கவிதைகளைப் படைக்கின்றன. இந்தப் படைப்புக்கள் ஓர் இலட்சியம் நோக்கிய கனவு களைச் சுமந்தவை. பிறந்தோம், வாழ்ந்தோம், அனுபவித்தோம், மரணித்தோம் என விதிகள் தப்பாமல் பாடிக் கொண்டிருப்பவர்களுக்கு அப்பால் மனிதனைக் கட்டிப் போட்டிருக்கும் அனைத்து விலங்கு களை உடைத்து மகாவலி கங்கை ஓரத்தில் ஒரு நாய் செத்தால்கூட பொறுப்புச் சொல்லக்கூடிய மனித உள்ளங்களை எதிர்பார்த்து நகர்கின்றது.

இந்தக் கனவுகள் எனக்கு மட்டும் சொந்தமானதல்ல. உலகின் பல பாகங்களில் இந்த கனவைச் சுமந்தவர்கள் வாழ்கிறார்கள். ஆனால், இவர்கள் பயணிக்கும் பிரகாசமான பாதைகளில் குண்டுகளைப் புதைத்து மேலால் பூக்களைத் தூவி வைத்திருக்கிறார்கள். இவர்கள் இந்த பயணம் நிச்சய உலகின் தலைவிதிகளை மாற்றும் என்றும் உலகுக்கு வழிகாட்டக்கூடிய முழுமைபெற்ற நாகரீகமொன்று அதிலிருந்து தோற்றம் பெறும் என்றும் குண்டுகளைப் புதைத்தவர்கள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றனர். இந்த அறிதலே ஒடுக்குமுறைக் கத்திகளை எம் கழுத்தில் வைக்கிறது. எம் மண்ணை மயானங்களாக்குகிறது. எனது ஒவ்வொரு உயிர்களையும் சன்னங்களால் சல்லடையாக்குகிறது.

இதற்குள் "உன் கவிதை என்ன துப்பாக்கியா?" என சிலர் கேட்கின்றனர். இல்லைதான் ஆனால், வெறும் கருத்துப் பறிமாற்றங்களாகவோ ஒடுக்குமுறைக்கெதிரான எழுத்து வடிவில் அமைந்த போர்ப் பிரகடனங்களாகவோ மட்டும் இவை இருக்கப் போவதில்லை. அது எமது பாதையில் மாற்று வடிவங்களுக்கான செயல்களைத் தூண்டும் எழுச்சியை நோக்கிய வரலாற்றில் ஓர் ஊசியின் முனையளவேனும் அதற்கான உந்துதலைத் தரும் வரலாற்றை நகர்த்தும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. கனவுகளினூடே என் கவிதை நிகழ்ந்து கொண்டே போயிற்று.

## 02

எப்போது கவிதை எழுத ஆரம்பித்தேன் என்று தடையமேதும் இல்லை. ஆனால், சின்ன வயதிலிருந்தே அல்ஹஸனாத்தில் கவிதா பவனம் வாசிப்பது வழக்கம். ஆரம்பத்தில் எல்லோருக்கும்போல் எனது பெயரை அச்சில் காண வேண்டும் என்ற ஆசைதான். கவிதா பவனத்தில் கவிதை நெய்தல் பகுதியில் நான்கு வரிகளில் என் முதல் கவிதை.

பிறகு தரம் 9 ல் தமிழ்ப் பாடத்தில் ஒரு தலைப்பு கோள் மண்டலமா கோள் மண்டபமா என்பது ஞாபகமில்லை. இந்த பாடத்தை ஒரு இலக்கிய வடிவமாக மாற்றி கணிப்பீட்டுப் பரீட்சையாக சமர்ப்பிக்க வேண்டும். நான் தெரிவு செய்த இலக்கிய வடிவம் கவிதை இது இயல்பாகவே நடந்தேறியது. என் முதல் பெரிய கவிதையும் இதுதான்.

தொடர்ந்து 10ம் தரம் மற்றும் O/L காலப்பகுதியில் பூங்கொடிதான் பூத்ததம்மா, என் எண்ணத்தின் பல வண்ணங்கள், சிந்துகின்றதென் இதயம், லப்டப், காற்றே இது எந்தன் கீதம் போன்ற கையெழுத்து கவிதைப் பிரதிகளை தயார் செய்து வகுப்புத் தோழர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வாசிக்கக் கொடுப்பேன். பிரதிகளின் பின்னால் காணப்படும் சில வெற்றுத் தாள்களில் அவரது கருத்துக்களைப் பதித்திருப்பார் இவர்கள்தான் என் கவிதையின் முதல் வாசகர்களும் முதல் திறனாய்வாளர்களும்.

பிறகு நான் உயர் கல்விக்காக தேர்ந்தெடுத்த துறையும் சிந்தனையும் என் கவிதை போக்கில் பாரிய மாற்றங்களையும் திருப்பங்களையும் ஏற்படுத்தியது. இதற்கான மிகப் பெரிய பங்களிப்பை கல்லூரியின் சுவர் பத்திரிகையான “வாஹாஃ அல்கலமிய்யா” தந்தது.

## 03

இத்தொகுதி சென்ற வருடம் வெளிவந்திருக்க வேண்டியது. தவிர்க்க முடியாத காரணங்களால் இவ்வருடமேவெளிவருகிறது. கவிதைத் தொகுதியை வெளியிட முன்வந்த அஷ்ரஃப் சிஹாப்தீனுக்கும் யாத்ரா வெளியீட்டு நிறுவனத்திற்கும் ஊர் வரலாற்றில் இந்த முதல் புத்தக வெளியீட்டை நடத்துவதில் அக்கறையுடன் இருந்து செயற்பட்டவர் களான Green Valley Tea Factory உரிமையாளர் அல்ஹாஜ் S.U.M. முஸம்மில் உடையார் மற்றும் ஜம்இய்யத்துத் தலபா வெலம்பொட கிளையின் முன்னாள் ஒருங்கிணைப்பாளரும் First World Ltd UK இன் உரிமையாளருமான சகோதரர் T.L.M. ஜவ்ஸி ஆகியோருக்கும்

என் மனப்பூர்வமான நன்றிகள். அத்தோடு வெளியீடு சம்பந்தமாக பல ஆலோசனைகளை வழங்கிய வெலம்பொட I.T. House நிறுவனத்தின் உரிமையாளர் சகோதரர் M.A.M. அர்ஷட் அவர்களுக்கும் எனது வெளியீட்டுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கிய இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி நிருவாகத்திற்கும் இவ்வெளியீடு வெளிவருவதற்கு எவ்வகையிலும் உதவ எண்ணம் கொண்டவர்களுக்கும் நன்றிகள் உரிதாகட்டும்.

அன்புடன் அமீன்
(0715494746)

# திறப்பு


- ஸைனப்
- உம்மாவின் புடவைத் துண்டு
- சுயம்
- கடவுளின் புகலிடம்
- என் நீர்க் காகமும் உன் கறுப்புக் கொக்கும்
- ஆபிரிக்கக் குழந்தையின் பசியின் மரணம்
- ஒரு வயசு தெரியாப்பொழுது
- நான்
- கடும் இருளுக்குப் பின்னரான இரவு
- என்னைச் சுற்றி வலிகளைச் சிதறி
- இரத்தப் பனி விழும் தேசத்தில் நான்
- வெட்கம்
- உயிரில் எழுதப்படும் உயில்
- அகதியின் தனிமையும் வருகையும்
- மையித்தின் மீதெழும் புல்வெளி



## என் நீர்க்காகமும் உன் கறுப்புக் கொக்கும்

என்னைப்
பாராமலே போகிறான்
நேற்று விழுந்து இன்றுடைந்த
மேகம்போல

தொண்டை தாண்டி
இதயம் கிழியக் கத்தியும்
காற்று அவனை
அடையவே இல்லை

மரமாய் நின்று வழி மறைத்து
அதிகார மொழி பேசியதில்
ஏகாந்தங்கள் அசைவற்று கசங்கியதால்
உயிர்த்த உயிர்
எனக்கென
சிலுவைகளை செய்தது

என் சிணுங்கல்களைக் கிள்ளி
சிரிப்பழுகையை என் முகத்தில் பூசி
என் கண்ணீரில்
அவன் "ஸம் ஸம்" செய்து
வாய் நிறைய உதடு கசிய
நீண்ட இருட் பொழுதில்
மௌனமாய் குடிக்கிறான்

கனவு உருகி எரிந்த
ஓரு வாழ்க்கைப் பருவத்தில்
இதே மெழுகு போல்தான்
யாருமில்லாத
என் வேதனையைக் கொட்டிய
ஓரு மரத்தில் என் ஞாபகம்

சலசலப்பான என் குளத்தில்
எப்போதோ ஓரு நாள்
ஏதோ ஒன்று பறந்து போக
கறுப்பின் ஒற்றுமையால்
என் இருப்பின் உறுதி
சருகாகியே போவது

கடைசி வரை
வராதே என்றேன் உன்னை
திரும்பத் திரும்ப வந்து
என் நிழல் கிறுக்கிக் கொண்டேயிருக்கிறாய்
நீ கடைசி வரை

# என்னைச் சுற்றி வலிகளைச் சிதறி

வானத்து முற்ற வெளியில்
மனசு பரப்பி
மயிரிழையில் நகம் கடித்து
காளான் குடையில்
நிழல்கள் நிஜமாக
நின்று கொண்டேன்

கொட்டும் மழையில்
என் கூடாரம் நனைந்துபோக
எடுத்த எடுப்பில் குளிர்ந்ததில்
இதயம் அதிர்ந்து நின்றது

இருப்பு நிர்ணயிக்கப்படாத
என் நாழிகையில்
நான் நுழைகையில்
வாழ்வெல்லாம்
எளிமை கலந்த வெறுமை
பேசாமல் போகிறது



தண்ணீரில் உயிர் பிரியும்
எறும்பின் வலி
காயங்கள் ஸ்பரிசிக்கப்பட்டதில்
தனிமையாய்
உயிர் பெறுகிறது

முகவரி தேடும்
முற்றுப் புள்ளியில்லா
என் வரிகளின் நீளங்களில்
கண்ணீர் சொட்டு மௌனங்கள்

சாளரம்
வழி விட்ட காற்று
என் விம்மல்களை
நாற்றம் என்று
சொல்லிப் போயிற்று
ரணமாய்



# ஆபிரிக்கக் குழந்தையின் பசியின் மரணம்

யார் யாரோ சடமாகியிருந்தார்கள்
பரந்த தேசமொன்றில்

எலும்போடியைந்த ஆடுகளுடனும்
வரட்டுப் புற்களுடனும்

மணற் புயலுடனும்
கடும் வெயிலுடனும்

உன் வாப்பாவும்
அதிலே என்றாகியது

சூம்பிய கால்களும் கைகளும் குப்புறமாய்
மழைக்கால இரவின் வானம் போல

பருந்துகள் தின்ற குதத்தின் வழியே
கருப்புச் சிவப்பான இரத்தம்

பிசுபிசுப்பான அது
பூ விழுந்த காம்பொன்றில் விழுந்திருந்தது

கரடு முரடான கறுப்புத் தோல்களும்
அழுகிய சதைகளும் கந்தல்களுடன்

நீயும் மணல் மேடுகளில் உயிரற்று இருப்பாய்
அது பசியின் உச்ச முதுமைக் கோடுகளாகும்


இந்த கறுத்த தடித்த உதடுகளை
முத்தமிடுகின்றேன் ஈக்களைப் போல

பசியின் எஞ்சியதை உறிஞ்சி
அதிகாரங்களின் முகங்களில் துப்புவதற்கு

## ஒரு வயசு தெரியாப் பொழுது

ஓட்டடை விழும் சத்தம்
பூவின் காம்பு முறியும்
கணங்கள்
என் நிலா நகரும் பாதை
எல்லாம்
என்னுள் இயைந்த
ஒரு பொழுது

நான் நடந்தேன்
கூட்டாஞ் சோறு
உண்டு சிந்திய
மணிகள் எல்லாம்
பரந்து கிடப்பதாக
என் ஞாபகத்தில்
"குஞ்சூடு" கட்டி
"மைனி" விளையாடி
நாட்கள் மட்டும் போன



இனிமைகள் அவை
மண்தான் சோறு
கிளிசரியா இலைக் கொத்தின்
உச்சி இலை பப்படம்

"அது" தான் என்று நினைக்கிறேன்
எனக்கு வயசு தெரியாது
அவர்கள் வந்தார்கள்
நான் மரத்தில்
ஏறிக் கொண்டேன்

என் சிரட்டையை
கஷ்டப்பட்டு உடைத்தார்கள்
ஒருவன்
ஒரு காம்பை இழுத்தான்
என் மாளிகை
குடை சாய்ந்தது
ஆற்றங்கரைப் புல் போல

என்னையும் பிடித்தார்கள்
"உம்மா" என்றேன்
கத்தினேன் கதறினேன்
என் கொய்யா மரத்து அணில்
தலை தெறிக்க ஓடியது

கண்ணுக்குள் உலகம்
மெதுவாக இருண்டது
ஒரு நுனியில்
இரத்தம் கசிவதாய்
ஈக்களின் ரீங்காரம்

போனது தெரியவில்லை
அடுத்த நாளைக்கு
நான் வந்திருந்தேன்
ஓவியம் தீட்டிய
நகக் கீறல் மேனியுடன்

# மௌனம்

கதவு திறந்த
இமைப் பொழுதின்
கண்ணீர் விடுதலைகளில்
ஓடாத இரத்தம்

சிலைகளோடு
உரையாடிச் செல்லும்
பொருள் புரியாத
சுடும் தென்றல்

மழலை தொடுகை இழந்த
வீட்டு மேற் பரப்புக்குள்
உணர்வுகள் உருகி விழுந்து
தெறிக்கிறது


கற்களிடம் காது வளைத்து
சேதி சொல்லியதில்
வெறுமையாய்ப் போனது
வெட்டவெளிதான்

சொந்தம் என்பதற்கு
உறவுகளின் பாதையில்
வேர் முளைக்கவில்லையென்றாலும்
தூரத்து தனிமரமாய்
காணுதல்கள் இல்லாமல்
உள்ளூரப் பறக்கிறது

தவழுதல்களும்
நுனிவிரல் இறுகப்பிடிப்புகளும்
விரல் சூப்புதல்களும்
மழலை அழுகையில்
தாய்ப்பால் கேட்டதும்
கண்ணாடிப் பெட்டிக்குள்
ஸ்தம்பிதமான போது
''யாரோ இவனான''
எனக்கு
''பகீர்'' என்றது

முற்றுப் புள்ளி ''லௌஹுல் மஹ்பூ ல்'' லில்
விழுந்த போது
தந்தையின் கையில்
கடைசியாக நீங்கள்
தோற்றமளித்த காட்சிகளில்
தூக்கிச் சென்ற மரண ஊர்வலத்தில்
ஸைனப் என்னை
மன்னித்துக் கொள்ளுங்கள்
உங்களை மண்ணறையில்

வைத்த போதும் "கபன்" புடவைக்குள்ளால்
என்னைப் பார்த்து
புன்னகைப்பது
புலப்பட்டவாறு வேதனையளிக்கிறது
இன்னும்



# கடும் இருளுக்குப் பின்னரான இரவு

உன்னை விட
ஒன்று மட்டும் எனக்கு
அதிகமாய்த் தெரியும்

மௌனத்தில் போடப்பட்டிருக்கும்
கல்லை
உடைக்கத் தெரியாததாகியும்
எல்லை கடத்தல் பற்றிய
கண்ணாமுச்சியை
நான்அறிவேன்

காலத்தின் பின்னால்
மறைக்கப்பட்டிருப்பவைகளை
அந்த ஓர் இரவில்
காணமுடியாதென நினைத்தாய்

அறிந்துகொள்
ஆந்தைகளினதும் புல்வாழிகளினதும்
சிதறல்களில் மறைந்து கொள்ளும்
இழைக்காவியமான ஓர் இரகசியத்தை
வெளியில் இழுத்து வைப்பவன்
நான்

கண்ணுக்கு எட்டாத வெளியில்
பாதை மறைதலும்
அந்திவானச் சூரியன் வீழ்தலும்
புழுதி நிறைந்த வெப்பக் காற்றும்
சகஜமாகிவிட்டது போல

கற்பகத்தை மறைத்து வைத்த பின்
எஞ்சியிருந்த கானலையும்
நக்கிக் கொண்டு போனாய்

உன்னில் இருந்து
உயிர் நரம்பு நெடுகிலும்
தாகித்துக் கொள்ளும் வலிகள்
வாழ்வாதாரங்களில்
கனவுகளை மட்டுமேயேனும்
யாசிக்க கேட்கிறது
பரவாயில்லை

இரவைக் கொண்டு
எப்போதோ ஒரு காலத்தில்
பழகிப் போனதால்
நீயும் வருவாய்
நானும் வருவேன்
மீண்டும் என் கண்ணீரை
கொண்டு போவாய் போகட்டும்
அன்றாவது
நீ எனக்கு பயங்கரவாதியென
உலகம் மட்டும் அறியட்டும்



# இரத்தப் பனி விழும் தேசத்தில் நான்

துப்பாக்கிகளில்தான் தேசத்தின்
பொழுதுகள் பூ க்கும்
அப்போதெல்லாம்
"அபூ குரைப் போல
மனசெல்லாம் இரத்த வாடை
வீசும்

சாம்பல் மேடுகளில் தோய்ந்த
மரக் கட்டையாய்
வாழ்வு
வீழ்ந்து கிடக்கிறது

இத்தனையில்...

இரத்தப் பனிவிழும்
தெருவோரங்களிலிருந்து
எமதான வரலாற்றை எழுத
எலும்புகளைத் தேடுகிறேன்

கந்தல் ஆடையும்
பரட்டைத் தலையுமாய்
ஓர் ஏழைச் சிறுமி
என்னைக் கடந்து போகும் போது
எதேர்சையாக
என்னிடம்
தட்டை நீட்டுகிறாள்
வாழ்வின் யதார்த்தம்
சில்லறையாய் விழுகிறது

இடுபாடுகளுக்கிடையிலிருந்து
எழும் ஓர்
மரணத்தின்
கடைசி சுவாசப்பெருமூச்சில்
எனக்கான
சுவனத்தின் ஆயுதங்களை
தயாரிக்கிறேன்
மிக மிக ரகசியமாக

# உம்மாவின் புடவைத் துண்டு

உனக்கு அறிய வாய்ப்பில்லை
உனது நினைவுகள் சந்தித்துக்கொள்ளும் சந்தடியில்
மிக மஞ்சலாகிப்போன உன் புடவைத் துண்டோடு
உயிர் நூல்கள் பிசகாகப் போடப்பட்டிருக்கும் அதை
அந்தத் துண்டின் மரணத் தறுவாயில்
என் நெஞ்சில் அழுத்திக் கொள்வேன்
அப்போது அது சில நேரம் காலையாகும்.

ஆயுதங்களுடனும் கூழாங் கற்களுடனும் மட்டுமே
பேசிப் பழகி உணவுண்ட எனக்கு
ஓழுங்கற்ற சித்திரமொன்றில் பார்வைகள் ஓழுங்காவது போல
சில பட்டாம்பூச்சி சிறகுகளை அது எனக்குத் தரும்


முட்காட்டுத் தலையாகவும் புழுதியுடனும்
காற்சட்டை இடுப்பைத் தாண்டி
படம் காட்டிக் கொண்டிருக்க
மூக்கில் நீர்ச் சொட்ட
நுனி நாக்கு ஓரு வட்டமிடலில் அதை சுவைத்துக் கொள்ள

ஏதோ ஓரு பள்ளத்தில்
விழுந்தெழுந்து அழுது கொண்டு வந்த போது
என் காயங்களுக்கு நீ கட்டிவிட்டதாக
சொல்கிறது அது

உனக்கு அறிய வாய்ப்பில்லை
முன்பெல்லாவற்றையும் விட இப்போது காயங்கள் அதிகம்
எல்லைகளைத் தாண்டி என் சதைகளில்
வேலிகள் திணிக்கப்படுவதும் அதிகம்
அதுகளால்

இப்போதும் முட்கம்பியில் சிதைவுண்ட
என் புயத்திலிருந்து இரத்தமும் சீழும்
வடிந்து கொண்டுதானிருக்கிறது
சிறியதும் பெரியதுமான கொசுக்கள்
மொய்த்துக் கொண்டுதானிருக்கின்றன
அதனை
அந்த புடவைத் துண்டும் என்னில்
பத்திரமாக

எனது ஆசையெல்லாம்
இந்த புடவைத் துண்டு
எனக்கு "கபன்" ஆக ஆவண்டும்
என்பதுதான்





# வெட்கம்

நிச்சயமாக
சொந்த பூ மியில்
என் வீட்டுக் கதவருகே நின்றுதான்
தட்டுகிறேன் – ஓர்
வழிப்போக்கனைப் போல

இப்போது நானில்லை
அங்கு

அபகரிப்புக்களில் இருந்து
மீள் அமர்வுகள் வரையிலான
எனது பாதையில்
நித்தம் இதே தட்டுதலின்
சப்தம் மட்டும்தான்
நீடிக்கிறது

விரட்டப்பட்டவனின்
நிலை கண்டு
எறிகனையாய் உள்ளத்தை
அரித்துக் கொள்ளும்
விடுதலையின் உணர்வு
வரும்போதெல்லாம்

இரவில்
நிழல் தேடுபவன் போல்
பார்வைகள் மட்டும்
நிலத்தை நோக்கி நீள்கின்றன

ஓர் உணர்வு மட்டும்
என்ன செய்ய

ஆண்மையை விற்று வந்த
தலைமைகளின் ஆமை வேகத்தில்
நனை் மட்டும் எதுவரை


ஓரு காக்கையும்
என்னைக் கடந்து செல்லும்
எறும்புக் கூட்டமும்
திரும்பிப் பார்த்து.

# உயிரில் எழுதப்படும் உயில்

இறுதிகளில்
கனவு காய்க்கும் பட்டை
மரமொன்றிலிருந்து
கிளைகளை முறித்துக்கொள்கிறேன்
எனது சந்தாக்குகளிலேனும் பத்திரப்படுத்த

ஓரு நாள்
போகச் சொன்னதாக
விரட்டினாய்
என்
மண்ணின்
மீதான
தீராத அழுகை
மையித்தாகியது

இஸ்ராயிலின்
உயிர் பிடுங்கல்
பற்றி அசரீரிகளில்
நரம்பெங்கும்
கனதியாய் வலி



வெகுதூரம் நடந்த பின்னும்
வயிற்றுக்குள்
மீஸான் கட்டைகள்
நடப்படுவதான
மண்வெட்டிச் சப்தங்கள்

எனினும்
காற்றுக் கருப்புக்களில்
எனக்கு
நம்பிக்கையில்லையென்றாலும
சேற்றுத் தண்ணீர் பருக்கிய நீ
அதுவாகவே இருக்கிறாய்

எப்படிப் போயினும்
உன்னால் மட்டும் சாவதில்லை
என்றாகிறது என்
உள்முகத் தேடலின் ஆத்மா

ஒரு நதியில்
நட்சத்திர இரவின் மூங்கில் காட்டில்
இதுவரை கேள்விப்படாத
ஓர் ஊரில் அது
ஷஹீதாகும்
உனக்கெதிராக



# அகதியின் தனிமையும் வருகையும்

வந்துகொண்டிருக்கிறது காற்று
எப்போதும் போல

உயிர் மீதான
அதி உச்சகோபத்தில்
அமிழ்ந்து போயிருக்கிறேன்

வந்து கொண்டிருக்கிறது காற்று
எப்போதும் போல

யன்னல்களையும்
முறிந்த கனவுகளையும்
ஆயுதங்களாக நிறுத்திவிட்டு
பார்வை எங்கோ தொலைகிறது

இந்த வீதிகள்
ஆத்மார்த்தங்களாய் அமையவில்லை
வரட்சியின் காயங்களில்
முளைக்கும் பனித்துளியோ
இரவுகளோ என்னிடமில்லை

காற்று வந்து கொண்டிருக்கிறது

மெஹ்ருபா!
நேற்றுவரை
சுற்றித்திரிந்தவளைச்சுற்றி
இன்று எதுவுமேயில்லை
அவளது தோழிகளையும் காணவில்லை
எங்கே போனார்கள்

அதோ!
என் மீது எச்சம் போட்ட குருவி
பறக்கிறது
ஆனால்
அவர்களை மட்டும் காணவில்லை

காற்று மட்டும்
வந்து கொண்டிருக்கிறது இன்னமும்
இடிபாடுகளின் ஓட்டைகளை
ஊடறுத்து

ஸைத்தான் மரங்கள்
என்னை புரிந்து கொண்டவைகள்
யாருக்கும் தெரியா பிரக்ஞைகளை
அதனிடம் சொல்லியிருக்கிறேன்

எல்லாவற்றையும் விட
இந்த தூசுகளுக்கு என்மேல்
அலாதியான ஓர் பிரியம்
குறிப்பாக
என் பரட்டைத் தலைமீது

இவை எல்லாவற்றிடமும்
நான் சொல்லியிருந்தேன்
ஒரு நாள் நான் வருவேன்

வெறுமையாகவும்
தனிமையாகவும்
அகதிகளில் ஒருவனாகவும்

காற்று
வந்து கொண்டிருக்கிறது



# நியம்

நான்கு அல்லது எட்டுக் கால்களாக
கட்டெறும்புகள் ஊர்ந்து வரும்
மண் உருண்டைகளில் படிந்திருக்கும்
சோனியின் இரத்ததை
மெல்ல மெல்ல இழுத்திழுத்துச் செல்லும்
இரண்டு எறும்புகள் அதை தட்டையடித்து
எதிரெதிர் திசையில் இழுக்கும்
கிழிக்க எத்தனிக்கும்
இன்னும் சிலதுகள் சேர்ந்து
மனசாட்சியே இல்லாமல்
சோனியின் இரத்தத்தை
நண்பகலில்
அடம்பன் கொடி படர்ந்த உயர்ந்த
வேலிகளில்
ஏற்றி
காய் காயென வெயிலில் காய்க்கும்

காயங்களாக்கும்
பின்னாலிருந்து நிறம் மாறவென
பொய்களையும் அண்டப்புழுகுகளையும்
தாராளமாய் அவிழ்த்துவிடும்
கட்டெறும்புகளின் வக்கிரமொழி
யாருக்கும் கேட்பதில்லை

அது
கைகளையும் கண்களையும் கட்டும்
முடியுமானவரை கொட்டித் தள்ளும்
நம்ரூதின் நெருப்புக்கிடங்கினுள்ளும்
எறியும்
என்றாலும்
சோனியின் இரத்தத்தில்
அழுத்தியழுத்திப் பதித்த ''சுயம்'' அழியாது

# நான்

என் தேசத்தின் இறுதி மரத்தில் கூடுகட்டுபவன்
மரணத்தின் நிழல்களிலிருந்து புறப்படுபவன்

அம்புகளிலிருந்து அணுகுண்டு வரை கண்டவன்
ஷஹீத் துர்ராவையும்
மெனாச்சம்பெகிங் ஐயும் வாசித்தவன்

ஆக்கிரமிப்பாளர்களின் கைகளை வெட்டுபவன்
கத்தியால் அல்ல
கவிதை எனும் பண்பாட்டால்



# கடவுளின் புகலிடம்

என்
கனவுகளையும் கண்களையும்
தோண்டியெடுத்து
உன் இலட்சியங்களின் ஓட்டைகளை அடை
கதறக் கதற
என் நரம்புகளை உருவி
வீணை செய்து
என் தேசத்தின் தேசிய கீதத்தை பாடு!
மயிர் கூச்செறியும் "சுபஹ்" வேளையில்
என் வாப்பாவை பள்ளியில் வைத்து
சன்னங்களால் சல்லடையாக்கு!
முக்காடு போட்ட ஒரே காரணத்திற்காக
அவளையும்
அவள் சுமந்திருக்கும் சிசுவையும்
உன் பூட்ஸ் கால்களால் உதை
மைல் கணக்கில் நடக்க வைத்து


தாகத்தின் உச்சியில்
சேற்றைத் தின்னக் கொடு!
குருதியில் ஓவியம் வரை!
எம் அகதி வாழ்வைக் கண்டு சிரி!
எனது எதிரியும்
உனது நண்பனுமானவுடன் புணர்!
கொல்!
எரி!
சுடு!
புதை!
உன்னால் எதையெல்லாம் செய்ய முடியுமோ
அதையெல்லாம் செய்!
கடைசியில்
உன் தனித்த தேசம் பொய்பட்ட நாளில்
கடவுளின் புகலிடத்தில்
நான் வெற்றியாளனாவேன்

# மையித்தின் மீதெழும் புல்வெளி

வித்தியாசமாய் ஆனால் உயிர்ப்பு மிக்கதாய்
கபுறுக்குழியொன்று
வீழ்ந்து கிடக்கிறது

என் வாப்பாவை
பிரதானமான பாத்திரமாகக் கொண்டு
இதில்தான் அடக்கியிருக்கிறேன்
ஏன்! உன் உம்மா
அவன் சகோதரன்
நேற்று காணாமல் போனானே அவனின் தம்பி
எல்லோரும் இதில் தான் மையித்தாக

நீ பறித்துச் சென்ற கப்பங்கள்
கண்முன்னே இழுத்துச் சென்ற
என் வண்டில் மாடுகள்
முற்றிப்பதமாகும் வரை பார்த்திருந்து
உன் மலத்தால் பீச்சியடித்த
என் விளை நிலங்கள்
எல்லாம் இதனுள்தான்



வாய்க்கால் வெட்டி அழுத கண்ணீரும்
முதுகு முறிய கட்டிய குடிலும்
பழங்கஞ்சிச் சோற்றுப் பானையும்
சில கபன் புடவைகளும்
இந்த கபுறுக்குழியினுள்தான்
உடல் துளைத்து பள்ளிச்சுவர்களில்
பதிந்த ரவைகளும்
வெறும் காலில் குத்திய நெருஞ்சி முள்ளும்
நீ கூறும் மூன்றாம் தரப்பும்
வடக்கை நினைத்தழுதபோது
எழுந்த வலியும் இதனுள்

ஏன் என் வடக்குத் தாயகமும்
இதனுள்
இப்போது இதை அடக்கம் செய்யுங்கள்

நாளை பொழுதுகள் வரும்
இளங்காற்று வீசும்
பூ க்கள் பஞ்சமேயில்லாமல் பூ த்து கிடக்கும்
வானம் விரிந்து பேசும்

எமதான அனைத்து மையித்திலிருந்தும்
புல்வெளியொன்று படையெடுப்பதாய்
முளைக்கும் - அது
பிறைவாலாய் இலையுருக்கொண்டிருக்கும்.
அப்போது
அமைதி
உலகை மையம் கொண்டிருக்கும்

## கவிஞர் சில குறிப்புகள்

வெலம்பொட, கூறதெனியைச் சேர்ந்த அல்ஹாஜ் ஆதம்லெப்பை சஹ்ருஹான் பீபீ தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனான அமீன் O/L வரை வெலம்பொட முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கற்றார். தற்போது தன் உயர் கல்வியை இஸ்லாஹிய்யா அரபுக் கலாபீடத் திலும் வெளிவாரி பட்டப்படிப்பை பேராதனை பல்கலைக்கழகத் திலும் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

அமீனுக்கு எதையுமே தன்மொழியில் கெஞ்சி கொஞ்சி சாதிக்கும் திறன் உண்டு. அடுத்தவர்களின் கண்ணீரில் கணதி அமீனின் கவிதைகளில் பலமான அதிர்வலைகளை தோற்றுவித்திருக்கிறது. வழமையாக எல்லோருக்கும் கவிதை எழுதத் தூண்டும் அந்தப் பருவ விதிகளை மீறி அமீனின் கவிதைகள் ஆரம்பங்களிலிருந்தே கருக்கொண்டதை பல தடவைகள் நான் அவதானித்திருக்கிறேன். அல்ஹம்துலில்லாஹ் அமீன் தன் உயர் கல்விக்கென்று தேர்ந் தெடுத்துக் கொண்ட இடம், துறை, நண்பர்கள், சிந்தனை, உறவாடும் ஏடுகள் எல்லாம் அமீனை இத்துறையில் வளப்படுத்தியிருக்கிறது. இலக்கிய வரட்சி நிரம்பிய ஒரு பிரதேசத்தில் அமீனின் வெளிப்பாடா னது பாலையில் விழுந்த ஒரு துளி மழை.

அமீனின் தமிழாசிரியர்
யசீரா கபுர்தீன் B.A. (Hons)
M.A. Dip.in. Edu

## நன்றிகள்

- அஷ்ரஃப் ஷிஹாப்தீன்
- அல்ஹாஜ் எஸ்.யு.எம். முஸம்மில்
- ரீ.எல்.எம். ஜவ்ஸி (U.K)
- அல்ஹாஜ் ஜே.எம். முஸ்தாக்
- அஷ்ஷெய்க் எம்.எச்.எம். உஸைர் இஸ்லாஹி
- அப்துல்லாஹ் அஸ்ஸாம் இஸ்லாஹி
- ஏ.ஸி.ஏ. மஸாஹிர் நளீமி
- எம்.ஏ.எம். அர்ஷாட்
- கிண்ணியா ஜஹான்கிர்
- ஏ.எஸ். ஆஷிக் முஹம்மத்
- எஸ். நளீம்
- எஸ்.எல்.எம். சியா ஹாரூன்
- எம்.எல்.எம். அஸ்ஹர்
- ஆசிரியை யஷீரா கபூர்தீன்

- தினகரன்
- வீரகேசரி
- அல்ஹஸனாத்
- யாத்ரா
- எங்கள் தேசம்
- பெருவெளி
- படிகள்
- செந்தூரம்
- வாஹா அல்கலமிய்யா
- திண்ணை
- இளவேனில்
- SLBC

என்னில் கல்லெறிந்தவர்களில்
யாருக்குமே தெரியாது
பட்ட ஒவ்வொரு வலியிலும்
ஓர் ஆற்றல் மிகு கண்ணீர் துளியும்
ஒரு பொறுமை மிகு வைரமும்
சில கவிதைகளும்
உருவானது பற்றி...

யாத்ரா
வெளியீடு

ISBN: 978-955-8448-03-8
9 78955 844803 8

Price: 150.00